Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 25 புதன்கிழமை (09-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 218

# வட கொரிய சரக்குக் கப்பல் 38 மாலுமிகளுடன் கடத்தல்!

## வெற்றிலைக்கேணிக் கடலில் நேற்று முன்தினம் முன்னிரவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடபகுதிக்குப் பொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த – 'மொறங் பாங்' (Morang Bong) என்ற - வடகொரிய சரக்குக் கப்பல் அதிலிருந்த 38 வட கொரிய மாலுமிகளுடன் நேற்று முன்தினம் முன்னிரவு 8.30 மணியளவில் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றது.

'மன்ஷல் இன்ரநஷனல் பிறைவேற் லிமிட்டெட்' என்ற தனியார் கப்பல் நிறுவனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக் கப்பல் வடபகுதிக்கு தனியாரின் பொருள்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது.

அதில் 38 வடகொரிய பிரஜைகள் மாலுமிகள் மற்றும் கப்பல் சிப்பந்திகளாகப் பணிபுரிந்து வந்தனர்.

சுமார் 2 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றிச் செல்லக் கூடிய இக் கப்பல் கடந்த 23 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் உள்ள பல தனியார் நிறுவனங்களுக்கு சிமெந்து மற்றும் பொருள்களை ஏற்றி வந்து இறக்கியது.

பொருள்களை இறக்கும் பணி பூர்த்தியடைந்ததை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தப்ப முயன்ற கப்பல் மீது சூடு! மாலுமிகளில் ஒருவர் பலி!!

வவுனியா, ஜூலை 9

புலிகளால் கைப்பற்றப்பட்ட கப்பல், அதிலிருந்த மாலுமிகளுடன் தப்ப முயன்றதாகவும்—

அவ்வேளை புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வடகொரிய மாலுமி ஒருவர் உயிரிழந்ததாகவும்—

'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தகவல் வெளியிட்டது.

இது குறித்து 'புலிகளின் குரல்' வானொலி மேலும் கூறியதாவது:-

அரசாங்கத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வடகொரிய நாட்டு — சரக்குக் கப்பல் வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் வைத்து கடற்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டது.

கடற்புலிகளின் பாதுகாப்பில் இருந்த இக்கப்பலுடன் மாலுமிகள் அத்து மீறித் தப்ப முயன்ற போது — பலத்த பிரயத்தனத்தின் பின்னர் — நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மாலுமி ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரின் சடலத்தை ஒப்படைக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது.

— இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (உ-164-21)

## 37 மாலுமிகளையும் விடுவிக்க நடவடிக்கை என்கின்றனர் புலிகள்

வடகொரிய சரக்குக் கப்பலுடன் பிடிபட்ட மாலுமிகளை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகப் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது:

'இந்த மாலுமிகளில் ஒருவர் உயிரிழந்து விட்டார். ஏனையோர் பாதுகாப்பாக உள்ளனர். இவர்களை ஒப்படைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.'

—இவ்வாறு அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

"வடகொரிய நாட்டுக்கு கொழும்பில் தூதரகம் இல்லை. எனவே அந்த நாட்டு மாலுமிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் குறித்து இந்தியாவில் உள்ள வடகொரிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் உதவியை நாட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" — என்று மேற்படி கப்பலை வாடகைக்கு அமர்த்திய கம்பனியின் நிர்வாக முகாமையாளர் எம், எஸ். எச். பௌமி தெரிவித்தார்.

(உ-21-164)

## புலிகளிடம் சிக்கிய கப்பலை நெருங்க கடற்படை அச்சம்?

கொழும்பு, ஜூலை 9

புலிகளால் கடத்தப்பட்டுள்ள வடகொரிய சரக்குக் கப்பல் அலம்பிலுக்கு அருகே கடற் பகுதியில் தரித்து நிற்பதாகவும் —

இக்கப்பல் கடற்படையின் [illegible] இடத்தில் தரித்து நிற்கின்ற போதிலும் அதை நெருங்குவதற்கு கடற்படை பின்னடிப்பதாகவும் —

செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளிட்டன.

இக்கப்பலில் அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருக்கலாம் என்றும் —

புலிகளின் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட அலம்பில் கடல் தளத்தில் கப்பல் தரித்து நிற்பதால் அக் கப்பலை நெருங்குவது ஆபத்தைத் தரலாம் என்றும் —

கடற்படையினர் கருதுதாகக் கூறப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறாவது நபர் உயிரிழப்பு

திருகோணமலை நகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் போது படுகாயமடைந்த கல்வித் திணைக்கள பாடசாலை வேலைப் பகுதிப் பொறியியலாளர் ரட்னராஜா நேற்றுக் கொழும்பு ஆஸ்பத்திரியில் மரணமானார். இவருடன் சேர்த்து இச் சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது. (உ-10-150)

### தங்கத்துரையின் பூதவுடலுக்கு

## ஏழு அமைச்சர்கள் நேரில் அஞ்சலி

திருகோணமலை, ஜூலை 9

கடந்த சனியன்று குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரையின் பூதவுடலுக்கு ஏழு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர் குழு அஞ்சலி செலுத்தியது.

இதற்காக அமைச்சர் குழு நேற்றுக்காலை கொழும்பிலிருந்து திருகோணமலை சென்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் விவசாய, காணி அமைச்சர் டி. எம். ஜயரத்ன—

ஸ்ரீ. ல. சு. கட்சி செயலாளரும் உல்லாசப் பயண, விமான சேவை அமைச்சர் தர்மசிறி சேனநாயகா—

தபால், தொலைத் தொடர்பு, தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர

துறைமுக, புனர் வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்—

மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சர் அலவி

(10ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி நிகழ்வுக்கு சபாநாயகர் தலைமை

### திருமலையில் தீவிர பாதுகாப்பு

கடந்த சனியன்று குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட திருகோணமலை மாவட்ட எம்.பியான அ. தங்கத்துரையின் இறுதிக்கிரியைகள் இன்று திருமலையில் நடைபெறும்.

திருகோணமலை மாவட்ட கூட்டணிக் கிளை இன்று காலை 10 மணிக்கு தங்கத்துரையின் இல்லத்திலிருந்து அவரது பூதவுடலைப் பொறுப்பேற்று நகர மண்டபத்துக்குக் கொண்டு செல்லும், அங்கு மக்கள் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவர்.

பிற்பகல் 2.30 மணிக்கு சபாநாயகர் கே.பி.ரட்னாயக்கா தலைமையில் இறுதி அஞ்சலி உரைகள் ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு இறுதி ஊர்வலம் தொடங்கும்.

இறுதிக் கிரியைகளை ஒட்டி திருகோணமலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வெளியூரிலிருந்தும் மேலதிகமான படைகள் திருகோணமலைக்குக் கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ளன.

(உ-150)

## கொலையாளிகள் ஒப்புக்கொண்டனர்?

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலை மாவட்ட எம்.பியான தங்கத்துரை கொலையுண்ட தாக்குதலைத் தாங்களே செய்ததாக, இது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

— இவ்வாறு கொழும்பின் இருந்து ஒலிபரப்பாகும் தனியார் சிங்கள வானொலி சேவையான "லக்ஹண்ட" நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

இதேபோன்ற பேச்சு நேற்றுக் காலை திருகோணமலை நகரத்திலும் பரவலாக அடிபட்டது.

பல்வேறு இயக்கங்களை விட்டு வெளியேறிய சிலர் ஒன்று சேர்ந்து — அந்தப் பின்னணியில்— இக்கொலைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நீடிப்பை கூட்டணி எதிர்க்கும்

கொழும்பு, ஜூலை 9

நாளை நடைபெறும் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது வெளிநடப்புச் செய்வது என்றும் —

பிரேரணை நீடிக்கப்படுவதை எதிர்த்து வாக்களிப்பது என்றும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்த முடிவில் எந்த வித மாற்றமும் இல்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

நாளை நாடாளுமன்றத்தில் விவாதம் ஆரம்பமானதும் —

கூட்டணி எம். பிக்கள் சிற்றுரை ஒன்றை ஆற்றி விட்டு வெளிநடப்புச் செய்வார்கள்.

யுத்த நிறுத்தம், பேச்சு மூலம் தீர்வு, மூன்றாந் [illegible]

( 10ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் நந்தாவில்

## கற்புலத்து மனோன்மணி

அம்பாள் ஆலய வருடாந்த

## லக்ஷார்ச்சனை சங்காபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் ஈசுரவருஷம் ஆனி மாதம் 25 ஆம் திகதி (9-7-97) புதன்கிழமை லக்ஷார்ச்சனை ஆரம்பமாகி ஆடி மாதம் 3 ஆம் திகதி (19-7-97) சனிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று நிறைவுபெறும். அத்தருணம் அம்பாள் அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஆலய பரிபாலனசபை

(47317)



## தேவை

ஆங்கிலம், தமிழ் தெரிந்த எழுதுவினைஞர் உடன் தேவை.

45 வயதுக்கு மேற்பட்ட — தட்டச்சு அனுபவமும், ஆங்கில மொழி பேசக்கூடிய ஆற்றலும் உடைய — ஆண்கள் தமது தராதரப்பத்திரங்களுடன் எதிர்வரும் சனிக்கிழமை (12 - 07 - 1997) காலை 9. 30 க்கும் 11. 30 க்கும் இடையில் அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சி
யாழ், அலுவலகம்.

(சி/1096)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக 4 ஆம் வருட
வணிகத்துறை மாணவன் கு. ரவீந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை

### செல்வமாணிக்கம் குலேந்திரம்

அவர்கள் 08-07-97 அன்று இறைபதம் அடைந்ததை இட்டு அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(48305)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### பார்வதியம்மா பாலசுப்பிரமணியன்

மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி பார்வதியம்மா பாலசுப்பிரமணியன் 08-07-1997 இல் காலமானார்.

அன்னார் யா/மீசாலை விக்னேஸ்வர மகாவித்தியாலய முன்னாள் கனிஷ்ட அதிபர் பிரம்மஸ்ரீ சு. பாலசுப்பிரமணியனின் அன்பு மனைவியும், நல்லூர் மூத்த விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலமுரளிதரக் குருக்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09-07-97 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா. பாலமுரளிதரக் குருக்கள்
(48304)

### வெற்றிவேலு டானியல் இரத்தினராசா

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலை கல்வி மாவட்டப் பொறியியலாளருமான வெற்றிவேலு டானியல் இரத்தினராசா அவர்கள் 7 - 7 - 97 திங்கள் கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் திரு. திருமதி வெற்றிவேலு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், திரு. திருமதி சிவப்பிரகாசம் (திருமலை) அவர்களின் அன்பு மருமகனும், பிரபதாரணியின் அன்புக் கணவரும், சுயந்தனின் அன்புத் தந்தையும், திருமதி வதனா அருட்செல்வம் [பரியோவான் கல்லூரி], மாலா, நேசன், சுதன், இரத்தினலீலா [யாழ். பல்கலைகழகம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்செல்வம் [பரியோவான் கல்லூரி], கருணாமூர்த்தி [அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா], சொரூபன் (பொறியியலாளர், புருணை), திவாகர் [பொறியியலாளர், ஆஸ்திரேலியா], நிமலன் [U K], அகிலன் ஆகியோர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல. 12 இராசவரோதய வீதி, திருகோணமலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க. வெற்றிவேலு [தந்தை]
[ஓய்வுபெற்ற நிதி உதவியாளர்,
யாழ். கல்வித் திணைக்களம்]

'ரத்தின வாசா'
இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(48303)

# விசேட அ. அட்டை குறித்த குறைகள்: பிரதேச செயலகங்களில் பணிப் பீடம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

விசேட அடையாள அட்டை வழங்கல் தொடர்பான குறைபாடுகளை தீர்க்கும் வகையில் பிரதேச செயலகங்களில் பணிப்பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை செயற்படும் இந்தப் பீடங்களில் விசேட அடையாள அட்டை தொடர்பாக தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்கள் தெரிவித்து அதற்குப் பரிகாரம் காண முடியும் என்று அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

திங்கள் முதல் வியாழன் வரை வாரத்தில் நான்கு நாள்கள் இந்தப் பணிப்பீடம் கீழ்வரும் இடங்களில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

★ பருத்தித்துறை — பிரதேச செயலக அலுவலகம்.
★ கரவெட்டி — பிரதேச செயலக அலுவலகம்.
★ உடுவில், தெல்லிப்பழை — உடுவில் பிரதேச செயலக அலுவலகம்.
★ சாவகச்சேரி, பளை — சாவகச்சேரி பிரதேச செயலக அலுவலகம்.
★ சண்டிலிப்பாய் — சண்டிலிப்பாய் பிரதேச செயலக அலுவலகம்.
★ சங்கானை— சங்கானை பிரதேச செயலக அலுவலகம்.
★ யாழ்ப்பாணம், நல்லூர் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு — விசேட அடையாள அட்டை அலுவலகம், யாழ். செயலகம்.
★ கோப்பாய் — கோப்பாய் பிரதேச செயலகம்.

## 2ஆம் தவணை முடிவில் 50 நாள்கள் விடுமுறை?

அரசாங்கப் பாடசாலைகளுக்கான 2 ஆம் தவணை விடுமுறை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதிக்குப் பதிலாக இம்மாதம் 26 ஆம் திகதியே ஆரம்பிக்கும் எனவும் —

3 ஆம் தவணை செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி, உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக 'தினமின' சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை பாடசாலைகளுக்கும், கல்விப் பணிப்பாளர்களுக்கும் இவ்வாரம் அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டது. (உ-10)

## மீன்பிடித் தடை வடக்கில் நீக்கப்படும்?

வடமாகாணக் கடலில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது என கொழும்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

மீன்பிடி, நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்கோளையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை குறிப்பிட்டது.

பாதுகாப்புக் காரணங்களையிட்டு கடந்த 14 வருடங்களாக வட கடலில் மீன் பிடிப்பதற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

நாட்டின் மீன் தேவையில் 40 சத வீதத்தை வட பகுதி மீன் பிடி மூலம் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் மீன் பிடிக்கக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததால் சுமார் 5 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (உ-4)

கிருஷாந்தி கொலை வழக்கு:

## 'ட்ரயல் அட் பார்' விசாரணை 14 இல்!

கொழும்பு, ஜூலை 9

கைதடி மாணவி கிருஷாந்தி மற்றும் மூவர் கொலை வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 'ட்ரயல் அட் பார்' முறையில் விசாரணைக்கு வருகிறது.

நீதிபதிகள் நிமால் திசநாயக்க, அன்ட்ரு சோமவன்ச, காமினி அபயரட்ன ஆகியோர் முன்னிலையில் இந்த விசாரணைகள் நடைபெறும்.

ஒன்பது இராணுவத்தினருக்கு எதிராக இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ-3)

## உடுவில் கோட்ட அதிபர் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஜூலை 9

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் தலைமையில் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இவ்வருடத்துக்கான புள்ளி விவர மதிப்பீடுகள் பற்றி இக்கூட்டத்தில் கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த அதிகாரிகள் விளக்கமளிக்க உள்ளனர். (இ-152)

## மணல் மேடாகக் காணப்படும் வீதி

செம்பியன்பற்று, ஜூலை 9

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில்—எழுதுமட்டுவாழ் வீதி சைக்கிள் கூட ஓட முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் உள்ளூர் மூலப்பொருள்களான களி மண்ணாலேயே இவ்வீதி போடப்பட்டது தற்போது மணல் மேடாகவே இவ்வீதி காணப்படுகிறது. (இ-36)

## தமிழ்த்தின விழா

நல்லூர் ஜூலை9

யாழ்ப்பாணம்நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் தமிழ்த்தின விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக யுனஸ்கோ இணைப்பாளர் நா. க. சண்முகநாத பிள்ளையும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி ம. சின்னத்தம்பியும்கலந்து கொள்ளுவார்கள். (இ – 111)


### ஸ்ரீசெல்வா திரையரங்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

10-30 — 2-30 மணி
(பழைய நேரம்)

நடிகர் திலகம் சிவாஜி,
சரோஜாதேவி,
விஜய் நடித்த

ஒன்ஸ்மோர்
ONCE MORE

(48306)


## வழமைபோல் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

நேற்று முன்தினம் வடக்குக் கடற்பரப்பில் கப்பல் ஒன்று கடத்தப்பட்ட போதும், நேற்று பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள் இறக்கும் பணி வழமைபோல் நடைபெற்றது.

''டொனாக்குழி'', ''வாதுவ'' ஆகிய கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி இடம் பெற்றது.

அதே நேரம் —

கடற்படை அதிகாரிகள் கடத்தப்பட்ட கப்பல் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

## லைசென்ஸ் இல்லாத சைக்கிள்கள்: திருமலையில் கடும் நடவடிக்கை

திருகோணமலை நகரில் லைசென்ஸ் இன்றி பாவிக்கப்படும் சைக்கிள்களுக்கு எதிராக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் திருகோணமலை நகரசபை ஊழியர்கள் கடும் நடவடிக்கை எடுப்பர்.

நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி இவ்வாறு அறிவித்திருக்கின்றார்.

திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (எஸ். எஸ். பி.) ரி. என். டி. சில்வா தெரிவித்த ஆலோசனைக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

''திருகோணமலையில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு பெரும்பாலும் சைக்கிள்களே பாவிக்கப்படுகின்றன. இத்தகைய சம்பவங்களின் போது குற்றவாளிகள் தமது சைக்கிள்களைக் கைவிட்டுச் செல்கின்றனர். அந்தச் சைக்கிள்களைக் கைப்பற்றினாலும் அவற்றில் லைசென்ஸ் இல்லாததால் சைக்கிள் உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றது. எனவே லைசென்ஸ் இன்றி பாவிக்கப்படும் சைக்கிள்களுக்கு எதிராக நகரசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கைக்கு பொலீஸார் முழு ஒத்துழைப்பு வழங்குவர்.'' — இவ்வாறு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (உ–150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# வெளிநாட்டவர்கள் விமானம் மூலம் நொம்பெனிலிருந்து வெளியேற்றம்!

நொம்பென், ஜூலை 9
சண்டை நடைபெற்று வரும் கம்போடியாவின் தலைநகர் நொம்பெனில் இருந்து முதல் தடவையாக வெளிநாட்டுப் பிரசைகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தாய்லாந்து விமானங்கள் நொம்பென் விமான நிலையத்தில் இருந்து தாய்லாந்துப் பிரசைகளை ஏற்றிக் கொண்டு பாங்கொக் சென்றுள்ளன.

சண்டைகளின் போது சேதமடைந்த நொம்பென் விமான நிலையம் வர்த்தக விமானச் சேவைக்கு தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.

அவசர சேவைகள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வருகின்றன.

## மோதல்களில் சிக்கி இருவர் பலி!!

நொம்பெனில் இடம்பெற்ற மோதல்களில் இதுவரை 16 பேர் வரைகொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் வெளிநாட்டவர்கள்.

இதனைத் தொடர்ந்தே வெளிநாட்டவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நொம்பெனில் இன்றும் பிரெஞ்சு, கனேடிய, அமெரிக்கப் பிரசைகள் இருந்து வருகின்றனர்.

வெளியேறுவதற்குத் தயார் நிலையில் இருக்குமாறு இவர்களை சம்பந்தப்பட்ட நாடுகள் கோரி உள்ளன. (இ)

## செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர்

மணிலா, ஜூலை 8
செவ்வாய்க் கிரகத்தில் நீர் நிலைகள் இருப்பதற்கான பல அடையாளங்களையும் ஆதாரங்களையும் கொண்ட புகைப்படங்களை 'பாத் பைன்டர்' ஆராய்ச்சிக் கலம் பூமிக்கு அனுப்பியுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பாறைகளில் அடுக்கடுக்காக, சகதி படிந்திருப்பதாகவும்-

பெரும் பாறைகள் உருட்டப்பட்டு ஒரே பாதையில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் — விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க் கிரகத்தில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது என்பதற்கு இது ஆதாரமாக இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (இ-5)

# ஹுன்சென் ஆதரவுப் படைகளின் முழுக்கட்டுப்பாட்டில் நொம்பென்

நொம்பென், ஜூலை 9
கம்போடியாவின் தலைநகர் நொம்பென் பெரும்பாலும் ஹுன்சென் ஆதரவுப் படைகளின் முழுக்கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் தற்போது பிரான்ஸில் இருக்கும் கம்போடியாவின் முதலாவது பிரதமர் நொரடோம் ரணரித் தமது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் சென்று அவர்களுடன் இணைவதற்காக கம்போடியா செல்லத் திட்டமிடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகர் நொம்பெனில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலைமை தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது.

அதேசமயம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமைப்பான ஆசியானில் கம்போடியா சேர்த்துக் கொள்ளப்படும் தருணத்தில் அங்கு நடக்கும் வன்முறைகள் ஆசியான் நாடுகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

கம்போடியாவில் நிலவும் சூழ்நிலைகள் குறித்து விவாதிக்க நாளை வியாழக்கிழமை அல்லது அதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர்களின் அவசரகால கூட்டம் ஒன்றை ஆசியான் அமைப்புக் கூட்டவுள்ளது என்று தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (இ-4)

## காபூல் விமான நிலையம் மீது தலீபான் எதிர்ப்பாளர் குண்டுவீச்சு

காபூல் ஜூலை 9
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் விமான நிலையத்தை தலீபான் அமைப்புக்கு எதிரான அணியினர் விமானம் மூலம் குண்டு வீசித்தாக்கியுள்ளனர்.

வீசிய குண்டுகளில் ஒன்று மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்ததில் சேதங்கள் ஏற்பட்டன.

கடந்த நான்கு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

எதிர்த்தரப்பினருக்கு ஈரானும் ரஷ்யாவும் விமானங்களை விநியோகிக்கின்றன என்று தலிபான் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இதற்கிடையில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அயூப்கான் ஆப்கானிஸ்தான் தொடர்பான அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்குடன் ரஷ்யா சென்றுள்ளார். (இ - 3)

## பிலிப்பீன்ஸில் ராமோஸின் பதவிக்காலம் நீடிக்கப்படுமா?

மணிலா ஜூலை 9
பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி ராமோஸின் பதவிக்காலம் நீடிக்கப்படுமா?

இது குறித்து பிலிப்பீன்ஸில் இப்போதே சர்ச்சை கிளம்பியுள்ளது.

ஜனாதிபதி 6 வருட காலம் மட்டுமே பதவியில் இருக்கலாம் என்று பிலிப்பீன்ஸின் அரசியல் சட்டம் கூறுகிறது.

இந்த 6 வருடகாலம் தற்போது பூர்த்தியடைவதை

### உலக அரங்கில்

அடுத்து ராமோஸ் தொடர்ந்து ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்று கோரி கையெழுத்துவேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ராமோஸ் தொடர்ந்து ஜனாதிபதியாகஇருக்கவேண்டும் என்று கோரி 55 லட்சம் பேர் இதுவரை கையெழுந்திட்டுள்ளனர்,

பிலிப்பீன்ஸில் 1986 ஆம் ஆண்டு பதவியில் இருந்து துரத்தப்பட்ட பேர்டினண்ட் மார்க்கோஸ் தொடர்ந்து 20 வருடகாலம் பதவியில் இருந்தார். அவரதுக்பதவி காலத்தில் நாடு வங்குரோந்து நிலையை அடைந்திருந்தது.

இதனை அடுத்தே பிலிப்பீன்ஸில் புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாக மட்டுப்படுத்தப்பட்டது.

பிலிப்பீன்ஸை இதுவரை ஆட்சி செய்தவர்களில் ராமோஸின் காலமே பொற்காலம் என்று கூறப்படுகிறது. (இ)

## சிரேஷ்ட ராணுவ அதிகாரி சென்ற ஹெலி வீழ்ந்து நொறுங்கியது!

### நாகாலாந்தில் சம்பவம்

நாகாலாந்து, ஜூலை 9
இந்தியாவின் வட கிழக்கு மாகாணமான நாகாலாந்தில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் பயணம் செய்த ஹெலிக்கொப்டர் ஒதுக்குப்புறக் காட்டுப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது.

மூன்றாவது இராணுவப் பிரிவின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் கிஷாப்சிங் இக் ஹெலியில் சென்று கொண்டிருந்தார் என்றும் —

இந்தக் ஹெலி வீழ்ந்ததுக்கான சரியான காரணம் இன்னும் தெரிய வரவில்லை என்றும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹெலி நாகா கிளர்ச்சிக்காரர்களால் சுடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (இ-3)

## ஷியா முஸ்லிம் தலைவர் சுட்டுக் கொலை

லாகூர், ஜூலை 9
பாகிஸ்தான் நகரமான லாகூரில் ஷியா முஸ்லிம் தீவிரவாதக் குழுவின் உள்ளூர் தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இவர் சுடப்பட்டார். (இ-3)

## குண்டுப் புரளி

சிட்னி, ஜூலை 9
விமானத்துக்குள் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகப் பயமுறுத்தி 3 லட்சத்து 79 ஆயிரம் டொலர்களைப் பெற்றதாகக் கூறப்படும் 17 வயது இளைஞர் ஒருவருக்கு எதிராக அஸ்திரேலிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

விமானத்தில் தன்னியக்க குண்டு வைத்திருப்பதாகவும் 'ரிமோட்' கட்டுப்பாட்டுக் கருவி மூலம் அதனை இயக்கி வெடிக்க வைக்கப்போவதாகவும் அந்த இளைஞன் பயமுறுத்தினான்.

சிட்னியிலிருந்து ஹொங்கொங்குக்கு இந்த விமானம் பறந்து கொண்டிருந்த சமயம் இச் சம்பவம் இடம்பெற்றது.

இளைஞனின் வயது காரணமாக அவனின் பெயரை நீதிமன்றம் வெளியிடவில்லை. (இ)



# நேட்டோ உச்சி மாநாடு மட்றிட்டில் நேற்று ஆரம்பம்

### 3 நாடுகளுக்கு மட்டுமே புதிதாக அங்கத்துவப் பதவி

மட்றிட், ஜூலை 9
நேட்டோ நாடுகளின் உச்சி மாநாடு நேற்று ஸ்பெயினின் தலைநகர் மட்றிட்டில் ஆரம்பமானது.

வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் என அழைக்கப்படும் நேட்டோ அமைப்பில் தற்பொழுது 16 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 3 நாடுகளை மட்டும் புதிதாகச் சேர்ப்பதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ருமேனியாவையும் ஸ்லோவேனியாவையும் சேர்ப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்த படியால் அம்முயற்சி கைகூடவில்லை.

அந்த இரு நாடுகளிலும் அரசியல் சீர்திருத்தங்கள் போதாது என்று அமெரிக்கா கருதுகிறது.

ஹங்கேரி, போலாந்து, செங்குடியரசு ஆகியவையே புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் நாடுகள் ஆகும்.


சாவகச்சேரி
சந்திரசேகர வாரிவநாத சிவன் கோயில்
இரதோற்சவம்
வியாழக்கிழமை (10-07-97) காலை 8-30 மணிக்கு
சிவனின் இஷ்ட சித்திகளைப் பெறுமாறு அழைக்கின்றோம்
விளம்பர உதவி-
ஐங்கரன் வெதுப்பகம் சாவகச்சேரி-
கல்பனா பட்டுச்சோலை சாவகச்சேரி.
(சி/1093)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களியுங்கள்

## மனித உரிமைகள் பேரவை எம். பிக்களுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 9

''அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் யுத்த நிறுத்தத்தை வலியுறுத் துங் கள்''

மனித உரிமைகளுக்கா ன மக்கள் பேரவை நா டா ளு மன்ற உறுப்பின ர் க ளு க் கு மேற்கண்டவாறு பகிர ங் க அழைப்பு விடுத்துள்ளது.

அந்தப்பேர வை விடு த் துள்ள பகிரங்க அழை ப் பி ல் மேலும் தெரிவிக்கப்பட் டு ள் ளதாவது:-

மனித உ ரி மை க ளு க் கு மதிப்பளிக்காமல் கு று கி ய அரசியல் இலாப நோக்கி ல் கொண்டுவரப்பட்ட மக்கள், விரோத சட் ட ங் க ளா ல் கடந்த 50 வருட காலத்தில் நாட்டில் பல தட வை க ள் இரத்த வெள்ளம் ஓடியி ருக் கிறது.

குறிப்பாக கடந்த 14வருட காலமாகத் தொடருகி ன் ற இனப்போரின் காரணமா க பல்லாயிரக்கணக்கான உயிர் களும், பலகோடிரூபாசொத்து களும் அழிக்கப்பட்டுள்ளன.

யுத்தம் காரணமாக நா டு ஒரு மயான பூமியாகக் காட் சியளிக்கிறது. உணவு, உறை விடம் இன்றி பல லட் ச ம் தமிழ்மக்கள் நாடோடிவாழ் வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளனர்.

முழுநாடுமே அகதிமுகா மாக மாறி வ ரு கி ன் ற து. காணாமற்போதல், காரண மி ன் றி க் கைது செய்தல், விசாரணையின்றித் தடுத்து வைத்தல், பாலியல்பலாத் கார ம், வீ தி த் த டை, பொருள் சேதம்என மக்களுக் கெதிரான ச ம் ப வ ங்கள் தொடர் கதையாகியுள்ளன.

நாட்டின் இளம் தலை முறை யுத்த களத்தில் பலி யிடப்படுவதாலும், ஏனைய சம்பவங்களின்போது கொல் லப்படுவதாலும் உ யி ர் வாழும் உரிமை மறுக்கப்படு கின்றது.

ஆயிரமாயிரம் இளைஞர் கள் அங்கவீனர்களாகின்ற னர். இத்தகைய யுத்தத் துக்கு உ று து ணை யா க நாடாளுமன்றம் மாதாந் தம் கூடி அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு அ ங் கீ கா ர ம் வழங்கி வருகிறது.

இத்தகைய அங்கீகாரத் தினை நாம் எதிர்க்கின் றோம். இப்படித் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-3)

## போலி நோட்டுக்கள் அச்சாவது குறித்து சென்னையில் விசாரணை

கொழும்பு, ஜூலை 9

சுமார் 80 லட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா போலி நோட்டுகளை அச் சிட்டு இலங்கைக்குக்கொண்டு வந்தது தொடர்பாக இந்தி யப் பொலீஸாரின் ஒத்து ழைப்புடன் சென்னை யி ல் விசார ணை க ளை மேற் கொள்ள இரு இரகசி ய ப் பொலீஸார் கடந்த புதன் கிழமை சென்னை சென்றுள் ளனர்.

கடந்த வருடம்கீதுவப் பகு தியில்82 போலி ஆயிரம்ரூபா நோட்டுகளுடன் இந்தியர்ஒரு வரும் இரு இலங்கைத் தமி ழர்களும் கைது செய்யப்பட் டதைத் தொடர்ந்தே இந் தப் போலி நோட்டு விவ காரம் வெளிவந்தது. (இ-10)

## பிரதேச செயலக சஞ்சிகை

வடமராட்சி கிழக்கு மரு தங்கேணி பிரதேச செயலர் பணிமனையால் காலாண்டு சஞ்சிகையாக ''ம ரு த ம்'' சஞ்சிகை வெளியிடப்பட்டுள் ளது. பல்வேறு அம்சங்களைத் தாங்கி இச்சஞ்சிகை வெளி வருகிறது. (இ-36)


உ
சிவமயம்





அருள்மிகு
அந்திரான்பதி முருகமூர்த்தி தேவஸ்தானம்
அருள்மிகு
சித்திவிநாயகர், அருள்மிகு பத்திரகாளி அம்மன்
பிரதிஷ்டையும் ஜீர்ணோத்தாரண
கும்பாபிஷேகமும்

மேற்படி ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் ஆனித் திங்கள் 27 இல் (11-07-97) வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் காலை 9.00 மணியளவில்
சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் அவர்களால் நடத்தப்படும்.

(09 - 07 - 97) புதன் பிற்பகல் 3.00 மணி

பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன திரு. கோவிந்தன் வேலுப்பிள்ளை சிற்பா சாரியார் அவர்களால் நிர்மாணிக்கப் பெற்ற ஆலயத்தில் அருள்மிகு சித்திவிநாய கர் அருள்மிகு பத்திரகாளி அம்மன் சகிதம் அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி ஊர்உலா வர அருள் பாலித்துள்ளது. (கொடிகாமம் வீதி, கரவெட்டி வீதி, விக் னேஸ்வரா வீதி, நெல்லியடி மார்க்கமாக) மெய் அடியார்கள் பூரண கும்பம், வைத்து அர்ச்சனை காணிக்கை செலுத்தி அருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

(10 - 07 - 97) வியாழன் மாலை 6 00 மணி கர்மாரம்பம் வாஸ்து சாந்தி

(11 - 07 - 97) வெள்ளி காலை 6.00 மணிக்கு எம்பெருமானுக்கு ஜீர்ணோத் தாரண கும்பாபிஷேகமும் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் நடைபெறும். ஆனி உத்தர அன்னதானமும் இடம்பெறும். மெய்யடியார்கள் மேற் குறிப்பிட்ட வைபவங்களில் கலந்து இறையருள் பெற வேண்டுகின்றோம்.

முக்கிய குறிப்பு:-

12 - 07 - 97 இல் இருந்து 21 நாள்களுக்கு நித்தியஸ்நபனம் நடைபெறும். இதில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யவும்.

வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை
( மாவட்ட வைத்திய அதிகாரி )
தலைவர்:

த. கனகராசா
செயலாளர்:
அந்திரான்பதி அருள்மிகு முருகமூர்த்தி ஆலயம்

விளம்பர அன்பளிப்பு:-
சயன்ஸ் சென்ரர் - கன்பொல்லை வீதி, கரவெட்டி.
மொடேர்ன் எடியுக்கேசன் சென்ரர் - பிரதானவீதி, நெல்லியடி.
வதிரி மொடேர்ன் சென்ரர் - வதிரிச்சந்தி, [illegible]

சி/1090



உ
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம், அளவெட்டி.
ஸ்ரீ பழநிவேல் முருகன்
ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி
பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

மெய்யன்பர்களே!

மேற்படி தேவஸ்தானத்தின் வெளிப்பிரகாரத்தில் அமைந்த ஆலயங்களில் ஸ்ரீ பழநிவேல் முருகனுக்கும், ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிக்கும். நிகழும் ஈசுர ஸ்ரீ ஆனி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (11 - 07 - 97) காலை 6. 24 தொடக்கம் 8. 00 மணி வரையுள்ள சஷ்டி திதி கூடிய கடகலக்கின ஆனி உத்திரமிணைந்த சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபி ஷேகம் நிகழத் திருவருள் கைகூடியிருப்பதால் அத் தருணம் அன்படியார்கள் அனைவரையும் தரிசனை செய்து திருவருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.


09 - 07 - 97 புதன் காலை 6. 50 — 8. 30 மணி
யந்திரபிம்பப் பிரதிஷ்டை முதலியன
10 - 07 - 97 வியாழன் காலை 8. 00 — 10. 00 மணி
பால் காப்புச் சாத்துதல் — அடியார்கள்
11 - 07 - 97 வெள்ளி காலை 6. 24 — 8. 00 மணி
மகா கும்பாபிஷேகம்
ஆனி உத்தர தரிசன வீதியுலா

பொ. ப. சபையார்

விளம்பர அன்பளிப்பு:-
புஸ்பா அன் கொம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1069)



சக்திவாய்ந்த கச்சிதமான நம்பகரமான
''டென்யோ''
ஜெனரேட்டர்




கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்

★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-
★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்
★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000-/

கிடைக்குமிடம்:
N. M. L. TRADERS
என். எம். எல். டிரேடர்ஸ்
85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8
தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500737
(சி/842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2- ம் ஆண்டு நினைவலைகள்



மண் உலகில்: 11—05—1950

விண் உலகில்: 09—07—1995

திருமதி
## கமலநாதன் சாவித்திரி (பேபி)

அன்பின் உறைவிடமே, பாசத்தின் பிறப்பிடமே!
களங்கமற்ற சொற்களால், செயல்களால்
கண்ணியமாய் அமைந்தாய் - உன் வாழ்வில்
இரண்டு செல்வங்களை ஈன்றெடுத்தாய்!
ஊரெலாம் புகழ் ஓங்கும் உத்தமியானாய்
கோயிலில்லாத் தெய்வமானாய்!
ஏழையைக் கண்டவுடன் ஏங்கும் - உன் இதயம்
இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுக்கும் - தாயே
இன்று எம்மை மறந்து சென்றது ஏனோ?
தாயே உன்னைக் காலன் கவர்ந்திட்டான்
நீயோ எம் உள்ளத்தைக் கவர்ந்திட்டாய்!
துரும்பாய்த் தத்தளிக்கும் இதய வேதனையோடு
துடித்துக் கொண்டிருக்கின்றோம்
அடுத்த பிறவியிலாவது இணைவோம் - என்ற
நம்பிக்கையில் சற்று அமைதியடைகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
மைத்துனர்கள்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி/ 1080)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலி அழைப்பும் நன்றி நவிலலும்

''மண்ணில் வாழ்ந்து செல்லும் தந்தாய்
விண்ணில் இறைவன் இன்பந்தருவார்.''



## உயர் திரு. E. M. யோசெவ்

(முன்னாள் அதிபர்— அ.மி.த.க. பாடசாலை; மூத்த உறுப்பினரும், பொறுப்பாளரும் — திருமறைக் கலா மன்ற இலக்கிய அவை, கிராமிய அவை; ஊக்குவிப்பாளர் — யாழ். பேராலய திரு இருதய சபை.)

ஆண்டவன் படைப்பு: 1926 — 10 — 14

ஆண்டவன் அழைப்பு: 1997 — 06 — 10

அன்னாரின் இரங்கற் திருப்பலி 1997 - 07 - 10 வியாழனன்று புனித மரியன்னை பேராலயத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உதவிய கரங்களுக்கு

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பற்பல உதவிகள் செய்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் வழிபாடுகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சிறப்பாக குருக்கள், கன்னியர்கள், திருமறைக் கலாமன்றத்தினர், யாழ். பேராலய பக்திச் சபையினர், யாழ். பேராலய நிர்வாகத்தினர், பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர், சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தினர் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் தற்சூழ்நிலை காரணமாகவும் தவறுதலாகவும் அறிவிக்கத் தவறியவர்களிடம் மனவருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15/8: மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(48294)

## யாழ். செயலக நலன்புரிச் சங்கம்

நவாலி, ஜூலை 9

நீண்டகாலமாக செயற்படாமலிருந்த யாழ். செயலக நலன்புரிச் சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை 97 ஆம் 98 ஆம் ஆண்டுகளுக்குரிய புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (இ-100)

## ஆயுள் வேத சிகிச்சை நிலையம்

சண்டிலிப்பாய். ஜூலை 9

வலி-மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகக் கட்டடத்தில் வாரம் இரு நாள்கள் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் இலவச சித்த ஆயுள்வேத சிகிச்சை நிலையம் செயற்பட்டு வருகின்றது. (இ-135)

# சென்றல் முகாம் பகுதியில் இருந்து மீண்டும் மக்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஜூலை 9

அம்பாறை சென்றல் முகாம் பகுதியில் இருந்து 39 தமிழ்க் குடும்பங்கள் மீண்டும் அச்சத்தினால் வெளியேறியுள்ளன.

கடந்த வாரம் இப்பகுதியில் நடந்த அசம்பாவித சம்பவத்தை அடுத்து அங்கிருந்து வெளியேறிய குடும்பங்கள் மீண்டும் அங்கு திரும்பிச் சென்றபோது சீருடை அணிந்த சிலர் அவர்களைப் பயமுறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்தே 39 குடும்பங்கள் அங்கிருந்து சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனைப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளன. (ஐ)

## சாரணிய பயிற்சி நெறி

கோண்டாவில் ஜூலை 9

குருளைச் சாரணத்தலைவர்களுக்கும், சாரணத்தலைவர்களுக்குமான சாரணிய பயிற்சி நெறி (அறிமுகப் பயிற்சி) பலை மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. (இ-71)

## பாராட்டுவிழா

கோண்டாவில், ஜூலை 9

அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்துள்ள முன்னாள் கிராமசேவையாளர் அ.த.க. கிருஷ்ணராசாவுக்கு உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி பொதுப்பணி மன்றங்களின் ஒன்றியத்தினால் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. (இ-71)

உ

துர்க்கை அம்பாள் துணை



மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்
துர்க்காபுரம்

# ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களைக் காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவிலில் ''துர்க்காபுரம்'' என்னும் ஸ்தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாளுக்கு இவ்வருடமும் 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடத்த எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈந்துள்ளாள்.

**அலங்கார உற்சவ விவரம்:**

அலங்கார உற்சவம் நிகழும் ஈசுர வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள் (10-07-97) வியாழக்கிழமை ஆரம்பமாகி, ஆடி மாதம் 4 ஆம் நாள் (19 07-97) சனிக்கிழமை இறுதி நாள் தீர்த்தோற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறும்.

9 ஆம் நாள் விசேட தீக்குளிப்பு வைபவமும், ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று துர்க்காதேவியின் வீதிஉலாவுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினந்தோறும் காலை 10 மணி தொடக்கம் ஸ்நபனஅபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதிஉலாவும் நடைபெறும்.

**உபயகாரர் விவரம்**

| | |
|---|---|
| 01 ஆம் நாள் 10-07-97 வியாழன் | திரு. சந்திரதேவா குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில் |
| 02 ஆம் நாள் 11-07-97 வெள்ளி | திரு. தியாகராசா குடும்பம், சங்கத்தானை |
| 03 ஆம் நாள் 12-07-97 சனி | திருமதி கலா குடும்பம், மணியன் தோட்டம், யாழ்ப்பாணம் |
| 04 ஆம் நாள் 13-07-97 ஞாயிறு | திரு. விஜயகுமார் குடும்பம், வதிரி, கரவெட்டி: |
| 05 ஆம் நாள் 14-07-97 திங்கள் | திருமதி புஸ்பராணி நவரத்தினம் குடும்பம், ப. ம. திட்டம் மிருசுவில் |
| | திருமதி புஸ்பலீலா பொன்னம்பலநாதர் குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். |
| 06 ஆம் நாள் 15-07-97 செவ்வாய் | திரு. செல்வநாயகதாஸ் குடும்பம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி |
| 07 ஆம் நாள் 16-07-97 புதன் | திரு. முருகேசு குடும்பம், ப. ம. திட்டம், மிருசுவில். |
| | திருமதி சிவபாக்கியம் சுந்தரேசன் குடும்பம், ப. ம. திட்டம் மிருசுவில் |
| | திரு. அருள் குடும்பம் ப. ம. திட்டம், மிருசுவில். |
| 08 ஆம் நாள் 17-07-97 வியாழன் | திரு. வி. தவக்குமார் குடும்பம், அல்லாரை வடக்கு |
| 09 ஆம் நாள் 18-07-97 வெள்ளி | திரு. விக்கினேஸ்வரன் குடும்பம். அல்லாரை |
| 10 ஆம் நாள் 19-07-97 சனி | திரு. செல்லத்துரை குடும்பம், மீசாலை |
| | திரு. மணியம் குடும்பம், மீசாலை வடக்கு |
| | திரு. இராசலிங்கம் சகோதரர்கள், ப. ம. திட்டம், மிருசுவில். |

பிரதமகுரு: பிரம்மஸ்ரீ இ. வேதரூபசர்மா ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் (பிரதமகுரு) சங்கத்தானை.

மங்கள இசை M, T, தயாபரன், கைதடி.

அடியார்கள் இவ்விழாக் காலத்தில் ஆலயத்திற்கு வேண்டிய பால், தயிர், இளநீர், தேங்காயெண்ணெய், பூக்கள், பூமாலை போன்ற பொருள்களை அம்பாளுக்குக் கொடுத்துதவி உற்சவத்தில் அனைவரும் பங்குகொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானதுர்க்காதேவியின் பாதாரவிந்தங்களைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

''இறை பணியே இன்பப் பணி''

சி. நவரத்தினம்
ஆலய தர்மகர்த்தா

துர்க்காபுரம், ப. ம. திட்டம், மிருசுவில்.

(48266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தரமான புதிய மிருதங்கம், தபேலா, டோல்கி என்பன விற்பனைக்குண்டு. பழைய வாத்தியங்கள் சிறந்த முறையில் சீர் செய்து கொடுக்கப்படும்: நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். [48197]

இனிக் கோழிக்குஞ்சுகளும் முட்டைகளும். ஊர்க்கோழிக் குஞ்சுகளும் முட்டைகளும் விற்பனைக்குண்டு. விரும்பமுடையோர் உடன் தொடர்பு கொள்ளவும். இராமநாதன் பிரபாகரன், நாவலர் பாடசாலை ஒழுங்கை, கல்வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய். [48292]

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ இயந்திரங்கள், சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி. (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

### தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கில் வசிக்கும் ப. முருகையா (விவாகப்பொருத்துனர்) என்பவருடைய கைப்பையுடன் குறிப்புக் கொப்பிகள், படங்கள் என்பன உரும்பிராய்க்கும், இணுவில் கோயில் வாசல் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான ரீதியில் கடித மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [47316]

## மலசல கூட வசதி இன்றி மாணவர் அவதி

சண்டிலிப்பாய், ஜூலை 9 வட்டுக்கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் மலசல கூட வசதியின்மையால் மாணவர்கள் சிரமமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள மலசல கூடம் கடந்த யுத்த கால அனர்த்தங்களின் போது முற்றாகச் சேதமடைந்து விட்டது. (இ-135)

வெளிவந்துள்ளது!

## ஆரம்ப விஞ்ஞானம்

ஆண்டு 5

1997 இல் தேசிய கல்வி நிறுவகம் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்துக்கு அமைவானது.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (48288)

வெளிவந்துள்ளது!

## G.C.E. A/L

இந்துநாகரிகம் I&II 1997

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவானது.

மாதிரி வினா விடைகள்

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (48289)

---

எழுதுமட்டுவாழ், விழுபளை அருள்மிகு கண்ணகை என வழங்கும்

## ஸ்ரீ மீனாக்ஷி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

### திருவிழா நிகழ்ச்சிகள்.

★ ஆனி மீ 27 ஆம் நாள் (11—07—1997) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி — கொடியேற்றம்

★ ஆடி மீ 2 ஆம் நாள் (18—07—1997) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணி — வேட்டைத்திருவிழா

★ ஆடி மீ 3 ஆம் நாள் (19—07—1997) சனிக்கிழமை காலை 8-00 மணி — இரதோற்சவம்

★ ஆடி மீ 4 ஆம் நாள் (20—07—1997) ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி — தீர்த்தோற்சவம்

மகோற்சவ சிவாச்சாரியார்
"கிரியாகலாபமணி"
சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக் குருக்கள்

அம்பிகை அடியார்கள் யாவரும் வந்து கலந்து கொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய பரிபாலன சபையினரும், தர்மகர்த்தாவும்.

(சி/1091)

---

## துயரத்தின் ஈராண்டு

அன்னையின் மடியில்: 05—09—1977

ஆண்டவன் மடியில்: 09—07—1995

### செல்வி அ. குமுதினி
09 - 07 - 1997

கன்னிமரித்தாய் வதியும் வன்னி'மா மடுப்பதியில்
கண்ணீரில் ஈராண்டு கரைந்ததம்மா உன் நினைவில்
சம்பேதுருவாரின் சந்நிதியில் துயரத்தின்
சாகரமாய் ஈராண்டு சங்கமமாகுதம்மா!
என்னை உன் எழில் வாயால் "மாமா"
என்றழைக்கையிலே
எண்ணில்லா ஆனந்தம் அடைவேனே கண்மணியே!
உன்னை என் மருமகளாய் பெற்றதென் பேறு என
எண்ணிநான் இருக்கையிலே இயமனாய் வந்த குண்டு
உன்னைப் பிரித்த கதை உலகறிந்த கதையம்மா!
கண்ணே! குமுதா நீ கடவுளின் மடியிருந்து
எந்நாளும் வேண்டிடுவாய் எங்களின் நாட்டுக்காய்.

பிரிவால் துயருற்று நிற்கும்:
அன்பு மாமா கி. பவுலின்

நவாலி கிழக்கு.

(48265)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 21 — 10 — 1976

அநியாய அழிப்பு: 09 — 07 — 1995

அமரர்
### வேலுப்பிள்ளை நடனேஸ்வரன்
[காண்டீபன்]

(யாழ். இந்துக்கல்லூரி உயர்தர கணித பிரிவு 95ஆம் ஆண்டு மாணவன்)

அநியாய வழியில் எமை விட்டுப் பிரிந்ததேனோ?
ஆற்றாத துயரினிலே எமைவிட்டுப் பிரிந்ததேனோ?
ஆவி பிரிந்ததோ ஐயா?
ஆறுமோ நம் துயரம் தேறுமோ எம் மனம்!

அன்னாரது பிரிவால் துயருறும்:
அம்மா, அண்ணாமார், அக்கா, அத்தான்,
அண்ணிமார், மருமக்கள், பெறாமக்கள்.

முருகமூர்த்தி வீதி,
நவாலி தெற்கு. (48281)

---

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 04 — 12 — 1949

மறைவு: 09 — 07 — 1995

### திருமதி கணேசலிங்கம் கமலாதேவி
[கனி]

அன்பின் திருவுருவாய், அமைதியின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் குலவிளக்காய், ஊர்புகழும் உத்தமியாய், மாண்புடன் வாழ்ந்து எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே! உந்தன் மறைவின் ஈராண்டைப் பண்புடன் நினைவு கூருவோம்.

- குடும்பத்தினர்

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (48107)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 05 — 1950

மறைவு: 09 — 07 — 1995

### கமலநாதன் சாவித்திரி

அம்மா, அன்போடும் பண்போடும் எங்கள் எல்லோரையும் ஆதரித்த அன்புத் தெய்வமே! நீங்கள் அருகில் இல்லாவிட்டாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் இதயத்தில் இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைக் கண்ணீர்ப் பூக்களால் துதிக்கின்றோம்.

அன்புக் கணவன், பிள்ளைகள்
உற்றார், உறவினர்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (48202)

---

## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு: 05 — 09 — 1977

அழிப்பு: 09 — 07 — 1995

### செல்வி அன்ரனிகுரூஸ் குமுதினி

"குமுதமாய் மலர்ந்தாயே குணத்தால் சிறந்தாயே
அமுதமாய்ப் பேசி அன்பினைப் பகிர்ந்தாயே
கொடியவர் வீசிய குண்டினால் இன்னுயிர்
சடுதியாய் இழந்திறையில் சங்கமமானாயே!
முடியுமோ மறந்திட முத்தான எம் சொத்தே!
விடியுமோ எமக்கெல்லாம் இறையிடம் கேளம்மா!..."

பிரிவினால் துயருறும்
தந்தை, தாய், தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். (48285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதியில் தொடரும் பல்கலைக்கழக 'ராகிங்'!

வவுனியா, ஜூலை 9

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ள வன்னி மாணவர்களை யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்கள் ''ராகிங்'' செய்தார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் சிலர் விடுமுறையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு வந்துள்ளனர்.

புதிதாக பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் அப்பகுதி மாணவர்கள் இந்த சிரேஷ்ட மாணவர்களால் ''ராகிங்'' செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ காவல் துறையினர் இச் செயலைக் கண்டித்து அங்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (இ-3-164)

# சமய நிகழ்வில்

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கா தேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-4)

★ ★ ★

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் உற்சவகாலத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி புதிய தேர் வெள்ளோட்ட விழாவும், 20 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(இ-4)

★ ★ ★

அச்சுவேலி உலவிற்குளம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து இடம் பெறும் இவ்வுற்சவத்தில் 18 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ-100)

## பஸ் சேவை

நவாலி, ஜூலை 9

ஆனைக்கோட்டை நவாலி வீதி ஊடாக போக்குவரத்துச் சபை பஸ் சேவை விரைவில் நடைபெறவுள்ளது.

இதற்கான பஸ் தரிப்பு நிலையங்கள், அறிவித்தல் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(இ-100)

## சங்கக்கிளைகளை திறக்க நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஜூலை 9

மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளான பெரியவிளான், சிறுவிளான் பகுதிகளில் சங்கக் கிளைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி-தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இதனை அடுத்து சேதமடைந்துள்ள இக்கிளைகளின் கட்டடங்களைதிருத்தி விரைவில் அவற்றைத் திறப்பதற்கான ஒழுங்குகளை சங்க நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. (இ-135)

# குடாநாட்டில் 500 மீனவருக்கு மானிய அடிப்படையில் வலை

யாழ்ப்பாணம், ஜூலை 9

குடாநாட்டில் உள்ள 500 மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் மீன்பிடி வலைகளை வழங்க யாழ். பிராந்திய மீன்பிடித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மையில் சீநோர் நிறுவனத்தால் கடற்தொழில் அமைச்சரிடம் கையளித்த 20 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளே கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

1996 ஆம் ஆண்டு மானியத்திட்டத்தின் கீழ் உதவி வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ள 500 மீனவர்களுக்கே இந்த வலைகள் வழங்கப்படும்.

இதே வேளை — இவ்வாண்டு வலைகள் மற்றும் கலங்களை மானிய அடிப்படையில் பெற விண்ணப்பித்துள்ள மீனவர்களின் விண்ணப்பப்படிவங்கள், யாழ். அலுவலகத்தால் சிபார்சு செய்யப்பட்டு கடற்தொழில் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன (இ-3)

---

## இரண்டாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

ஆண்டவன் படைப்பில்
**1935 - 11 - 03**

ஆண்டவன் அழைப்பில்!
**09 - 07 - 1995**

### திருமதி புஸ்பம் இரத்தினவேல்

(இளைப்பாறிய ஆசிரியர், யசிந்தா கல்லூரி, பண்டத்தரிப்பு)

புன்னகைக்காய் புஸ்பித்த பூவே புஸ்பம்
சொல்லாமல் எங்கம்மா தொலைதூரம் சென்றீர்கள்?

பத்து வயது முதல் பரிவோடு எமைத்தாங்கி
எத்துயரும் நீக்கி இனிதெம்மை வளர்த்தீர்கள்!
தாயினும் பெரியதொரு தயவாய் இருந்த எங்கள்
ஆவியைப் பிரிந்திங்கே அல்லற்பட்டிருக்கின்றோம்.

யேசுமகன் அன்று தோளிலே தாங்கியதை
பாவி நாம் இங்கே நெஞ்சிலே சுமப்பதற்கா
பாதியிலே எமைவிட்டுப் பரலோகம் போனீர்கள்?
கூவியழைக்கின்றோம் குரல் கேட்க மாட்டாதோ
ஓடியே வந்து ஒரு வார்த்தை கேளீரோ?

அர்ச்சனைக்காய் புஸ்பித்த அன்னையே! நீங்கள்
அஞ்சலிக்காய் ஆகிப்போய்
ஆண்டுகள் இரண்டு ஆனபோதிலும்
ஆறுமோ எங்கள் அழுகின்ற நெஞ்சு!

ஆவியே எம்மிடத்தில் அடங்கித்தான் போனாலும்
தாயேஉன் அன்பு உருக்குலைந்து போகாது!
ஏழை எமக்காய் நாளை வருவீர்கள் என
நாளெல்லாம் உங்களுக்காய் நாம்
காத்திருக்கின்றோம்.

உங்கள் அன்பால் ஈர்ந்த
**பிள்ளைகள்.**

பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலி.

(48212)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 19 — ?1 — 1979

அநியாய அழிப்பில்: 09 — 07 — 1995

### செல்வன் செல்வராசா பிரதீஸ்

(பிரசாத்)

ஈராண்டு கழிந்ததென்று
ஊருலகம் சொன்னாலும்
கால மற்ற வேளையுனை
காலன் கவர்ந்த கதை
நேற்று நடந்தது போல்
நெஞ்சமெலாம் வேகுதையா!
கூற்றுவனாய் வந்த
குண்டுகளால் நீ மறைந்தாய்
ஆற்ற முடியாதெங்கள்
மனக்கவலை காலமெலாம்!

உன் பிரிவால் துயருறும்
—குடும்பத்தினர்

கலையரசு வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(47315)

---

## துரித மீட்டல்

**DAY CLASSES**

**O/L 97**

கணிதம்

bY:
**PARA**

ஆரம்பம்: 14-07-97

★ அடிப்படையிலிருந்து
★ அலகு ரீதியாக
★ பயிற்சிப் பரீட்சைகள்
★ குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர் மட்டும்.

**BRIGHT INSTITUTE**

10, பிளர்ச்சஸ் ஒழுங்கை
சுண்டுக்குளி.

(48297)

---

## 2 - ம் வருட நினைவஞ்சலி



மலர்வு! 06 — 03 — 1933

உதிர்வு: 02 — 07 — 1995

### அமரர் ஆசைப்பிள்ளை கதிரவேல்

(குணசிங்கம்)

(இளைப்பாறிய கச்சேரி எழுதுவினைஞர்)

**திதி: 09. 07. 1997**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி நல்வழிகாட்டி எங்களை வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
செ. இராஜேஸ்வரன்,
கலட்டிலேன், கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(47314)

---

## 31 - ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் இராசையா மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

தோற்றம்: **23 - 08 - 1937**

மறைவு: **09 - 06 - 1997**

அன்பாகவும் பாசமாகவும் மனதில் களங்கமில்லாக் கனிவுறு
சொல்லினாலும் புன்னகை தவழும் மதிமுகத்துடனும்
எம்மை எல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு திங்கள் ஆனாலும்
ஓராயிரம் நாள்வரை உங்களை நினைத்திருப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

'கண்ணன் வாசா'
கட்டுடை, மானிப்பாய்.
(48291)

மனைவி, மக்கள்,
மருமகள், பேரப்பிள்ளை,
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனயீனமாக விடைத்தாள் திருத்துவோர் மீது நடவடிக்கை

## விரைவில் சட்டத்தில திருத்தம் வரும்

கொழும்பு, ஜூலை 9
கவனயீனமாக விடைத்தாள் திருத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதற்காக பகிரங்கப் பரீட்சைகள் தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் போது கவனக் குறைவால் ஏற்படும் தவறுகளைக் குறைப்பதற்கும்—

அவ்வாறான தவறுகள் குறித்து விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்க வசதியாகவும் — பகிரங்கப் பரீட்சைகள் தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள்மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## ஜே.263 அ. அட்டை

கோண்டாவில், ஜூலை 9
கோண்டாவில் பஸ்டிப்போவுக்கு அருகாமையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் ஜே/263 கிராமசேவகர் பிரிவுக்குரியவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. (இ-71)

## மத்திய கல்லூரி லியோ கழகத்தின் ஆண்டு விழா

யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம் தனது 15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நாளை வியாழன் காலை கல்லூரி தம்பர் மண்டபத்தில் ''அபிமாச்சுடர்'' என்னும் சஞ்சிகையை வெளியிட விருக்கிறது.

அன்று புதிய உறுப்பினர் பதவியேற்பும் இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சியையொட்டி சில செயற் திட்டங்களையும் லியோ கழகம் மேற் கொள்ள விருக்கிறது.

இரு மாணவர்களுக்கு செயற்கைக்கால் பொருத்துதல், 13 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல் பாடசாலைக்கு 100 அடி நாடாவழங்கல், கழகம் நடத்திய வலைப்பந்தாட்ட. கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் கேடயங்களை வழங்கல், பொது அறிவுப் போட்டி பரிசளித்தல் ஆகியன இடம் பெறும். (இ-3)

## சுகாதார தொண்டர் பயிற்சி நெறி

சுகாதாரத்தொண்டர்களை பயிற்றுவிப்பதற்கான பயிற்சிநெறி கடந்தமுதலாம், இரண்டாம் திகதிகளில் திருகோணமலையில் நடத்தப்பட்டது.

உலகசுகாதாரஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இப்பயிற்சி நெறிக்கு ஒவ்வொரு மாகாண பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இருந்தும் ஆறு பேர் பங்கு கொண்டனர். இ-15)

## திருவாசக விழா

வலிகாமம் தெற்கு ஜூலை 9
இணுவில் கிழக்கில் உள்ள முதாகர பவனத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை திருவாசக விழா நடைபெற உள்ளது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரின் ஆதரவில் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞான சுந்தரம் தலைமையில் விழா நடைபெறும்.

'திருவாசகம் காட்டும் பக்தி நெறி' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைதலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் உரை நிகழ்த்துவார்.

இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் மா வேதநாதன், திருவாசகத்தில் சைவசித்தாந்த சிந்தனைகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

தமிழ்த்துறை தலைவர் கலாநிதி நா. சுப்பிரமணியன் தொகுப்புரையாற்றுவார். (இ-152)

## வீதி மூடப்பட்டதால் மக்கள் பாதிப்பு

தென்மராட்சி, ஜூலை 9
மூன்று மைல் நீளமான கைதடி கோப்பாய் வீதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளதால் கூடுதலாக 12 மைல் தூரம் பயணம் செய்யவேண்டிய நிலை இப் பகுதி அரச ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இருந்து வருகின்றது.

இவ் வீதியை பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடுமாறு இப் பகுதி பொதுமக்களும் அரச ஊழியர்களும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் கோரியுள்ளனர். (இ-117)


# 31-ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 02 — 1931

மறைவு: 09 — 06 — 1997

உரும்பிராய் தெற்கு
## திருமதி சாஸ்வதி சபாரத்தினம்

அன்பின் சிகரமாக, பண்பின் உறைவிடமாக எங்கள் வாழ்க்கையில் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த அன்புத் தெய்வமே!
உங்கள் பிரிவு எமக்குச் சொல்லொணாத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது; நாங்கள் உங்கள் நினைவாகவே இருக்கின்றோம்; என்றும் இருப்போம்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(48298)

# 31 - ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 10 — 08 — 1919

மறைவு: 09 — 06 — 1997

திருமதி
## சிவக்கொழுந்து பொன்னம்மா

அன்பின் அணிகலனாய், பண்பின் சிகரமாய். பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்து எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 9-7-97 இல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சு. கேதீஸ்வரதாசன்,
75, திருமகள் வீதி,
அரியாலை.

(48270)

# UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME [ UNDP ]

## VACANCIES

Applications are invited from eligible candidates for the following posts for immediate engagement.

**(1) Drivers:**
Should possess a valid driving licence and have at least 5 years experience. Ability to speak in English and Sinhala is essential.

**(2) Security Guards:**
Should have a minimum of 3 years experience in an established organization in the relevant field. Working knowledge in English is essential.

**(3) Gardener Cum helper:**
Should have a minimum of 5 years experience in an established organization as gardener. Preference will be given to those who can converse in English.

**(4) Cook:**
Skill in western and eastern dishes is essential. Should be able to converse in English.

Applications with names and addresses of two referees should reach us before the 15 th of July 1997.

**UNDP**
**121 A, TEMPLE ROAD,**
**NALLUR, JAFFNA.**

(48295)

உ
சிவமயம்

# திருமணம்



அன்புடையீர்:
நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் ஆனித்திங்கள் 27 ஆம் நாள் (11 - 07 - 1997) வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கும் 9-00 மணிக்கும் இடையில், உத்தர நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**சிவ அனுபூதிச்செல்வன்**<br>அவர்களுக்கும் | எமது கனிஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**ரதிதேவி**<br>அவர்களுக்கும் |

ஐங்கரன் அருளால் அருள்மிகு நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்துவைக்க அருள் பாலித்துளது. அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்களை வருகைதந்து தம்பதியினரை ஆசீர் வதித்தும், அன்று நண்பகல் மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும்,—

மறுநாள், சனிக்கிழமை 12 - 07 - 1997 அன்று பி. ப. 2-30 மணியிலிருந்து பெரியமாவடி, கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் நிகழவிருக்கும் விருந்து உபசாரத்திலும் பங்கு கொண்டும் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வணக்கம்

★ தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்.



| | |
|---|---|
| ஸ்ரீமதி நாகம்மா தில்லைநாதன்<br>பெரியமாவடி<br>கச்சாய் வீதி<br>சாவகச்சேரி. | ஸ்ரீமதி சரஸ்வதி<br>பஞ்சாட்சரம்<br>''அகிலேசர் வளவு''<br>நீர்வேலி. |

(48300)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திறவு கோல் தேவை

திருகோணமலை நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட அந்த மாவட்டத்தின் நாடாளு மன்ற உறுப்பினரான அ. தங்கத்துரை கொல்லப்பட்டார். அவருடன் குறிப்பிட்ட பாடசாலையின் அதிபரும் மற்றும் மூவரும் மரணமானார்கள்.

பாடசாலை வைபவம் முடிந்த தறுவாயில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு — துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே நிராயுதபாணிகளான இவர்கள் கொல்லப்பட்டனர்; காயமுற்றனர். இப்படி ஒரு கதி தமக்கு உண்டாகும் என்று அவர்கள் ஒருபோதும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

இக்கொலைகளைச் செய்தவர்கள் யார்? சூத்திரதாரிகள் யார்? இதற்கான பின்னணி என்ன? நோக்கம் என்ன? — இவை குறித்து இதனை எழுதும்வரை எதுவும் வெளியாகவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பதால் இச்சம்பவம் ஓர் அரசியல் கொலையுமாகிறது. அதனால் ஏனைய கொலைச் சம்பவங்களை விட இது அதிக கவனத்தை ஈர்த்திருக்கிறது.

கொலைச் சம்பவங்கள்; வன்செயல்கள் என்பன மனித உயிரின் மதிப்பைத் தூசுக்குச் சமனாக்கும் விதத்தில் நாளாந்தம் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம், மிகக் குறிப்பாக வடக்கு — கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன.

ஆயுதம் கையில் இருந்தால் நிராயுதபாணிகளான மக்களை எதுவும் செய்யலாம், எப்படியும் செய்யலாம் என்ற போக்கு நாளாந்தம் வளர்ந்து வருகிறது; பெருகி வருகிறது.

வடக்கு — கிழக்கு இத்தகைய மனித கொலைக்களமாக மாறுவதற்கு கடந்த பதினான்கு வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரே பின்னணியில் உள்ளது. இந்தப் போர் வெடிப்பதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை ஓர் இனத்தை மற்ற இனத்தினர் அடக்கி ஆள்வதற்கு மேற்கொண்ட முனைப்புகளே போர் மூளுவதற்கு வித்தாயின.

போர் ஒழிக்கப்பட்டு — போர் நிறுத்தப்பட்டு — அமைதி நிலை தோற்றுவிக்கப்படுவது மேன்மேலும் மிக அவசிய தேவையாகி வருகிறது. அதுவே மக்களில் மிகப் பெரும்பாலானோரின் விருப்பமாகவும் உள்ளது, ஆனால் அதனை அடைவதற்கு உழைக்க வேண்டிய அரசியல்வாதிகள், அது குறித்து இதயசுத்தியுடன் செயற்படுகின்றார்களா?

அரசியல், பொருளாதார, சமூக, இராணுவப் புலங்களில் விரவிப்படர்ந்திருக்கும் ஆள்வோன் — ஆளப்படுவோன் நிலையை நீக்குவதற்கு அரசும் அரசியல் தலைவர்களும் அக்கறையுடன் செயற்பட்டால், போரை முடிவுக்கு கொண்டு வரலாம். அமைதி — நீதியுடனான சமாதானம் என்ற வெளிச்சத்தைக் கொண்டு வருவதற்கானதிறவுகோலும் அதுவே.

எல்லாத் தரப்பினரும் இத்தகைய சிந்தனையுடன் மக்கள் நலன் நாடி விரைந்தும் விருப்பத்துடனும் செயலாற்ற முன்வரவேண்டும்.

# வருடாந்தம் ரூபா 4500கோடி தங்கக் கடத்தலால் இழப்பு!

## யுத்தச் செலவுக்கு சமனான தொகை இது

கொழும்பு, ஜூலை 9

சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்கம் கடத்தப்படுவதால் ஆண்டொன்றுக்கு அரசு சுமார் 4 ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை இழக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாட்டுக்குள் கடத்தப்படும் தங்கத்தில் 95 சதவீதம் ஏதோ ஒருவிதத்தில் அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியாத விதத்தில் கடத்தப்படுகிறதாம்.

ஆண்டொன்றுக்கு தங்கக் கடத்தலால் ஏற்படும் இழப்பானது நாட்டின் மொத்தப் பாதுகாப்புச் செலவீனமான 4800 கோடி ரூபாவுக்குச் சமமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாகக் கடத்தப்பட்டு சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்படும் தங்கத்திற்கு குற்றப்பணம் விதிக்கப்படுகிறது. இவ்வாறு அறவிடப்படும் தொகை மாதம் ஒன்றுக்கு 10 முதல் 15 கோடி ரூபா என சுங்கத்திணைக்களம் தெரிவிக்கிறது.

கடத்தப்படும் தங்கத்தில் 5 சதவீதத்தை மட்டுமே தங்களால் கைப்பற்ற முடிகிறது என சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-10)

# நகரில் ஆஸி. தூதர்

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஆஸ்திரேலிய தூதுவர் டேவிட் றிச்சி நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார்.

தமது அலுவலக அதிகாரிகள் மூவர் சகிதம் நேற்று நண்பகல் யாழ். செயலகத்துக்கு வந்துசேர்ந்த அவரை யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் உட்பட செயலக அதிகாரிகள் வரவேற்றனர்.

அதையடுத்து செயலகத்தில் நடந்த கூட்டத்தில் அவர் பங்குபற்றினார். யாழ். நிலைமை குறித்து விவரம் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்து பல தரப்பட்ட விடயங்கள் குறித்து அவர் பேசினார்.

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் சர்வதேசத் தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு அவர் இன்று விஜயம் செய்யயவிருக்கின்றார். (உ-3)

# கரும்புலி வாரத்தில் கிழக்கில் தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டம்!

## அங்கு 800 போராளிகளுடன் பொட்டு அம்மான்?

கொழும்பு, ஜூலை 9

கரும்புலி வாரத்தில் படையினரின் கவனத்தைக் கிழக்கு மாகாணப் பக்கமாகத் திசை திருப்பி, வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரின் முன்னோக்கிய நகர்வைத் தடுக்கும் நோக்கில், கிழக்கிலுள்ள முக்கியமான இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்தப் புலிகள் திட்டமிட்டுள்ளனர். இத்தகைய திட்டங்கள், குறித்த தகவல்கள் படையினருக்குக் கிடைத்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவிக்கிறது.

இத்தாக்குதலை மேற்கொள்ளப் பொட்டுஅம்மான் 800 விடுதலைப் புலிகளுடன் கிழக்கு மாகாணம் சென்றுள்ளார் எனவும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது. (உ-10)

# ஆனைக்கோட்டையில் 2 பெண்கள் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 9

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயப் பகுதியில் — நவாலி வீதியில் — நேற்று முன்தினம் பிற்பகல் 2-30 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இனந் தெரியாத இரு இளம் பெண்களின் சடலங்கள் நேற்று யாழ். ஆஸ்பத்தியில் பொலீஸாரால் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

சுமார் 22, 24 வயது மதிக்கத்தக்க இனந் தெரியாத இச் சடலங்கள் இனங் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சடலங்களில் நெற்றியிலும், மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

ரோந்து சென்ற இராணுவத்தை நோக்கி கிரனேட் வீசப்பட்டதாகவும் —

அதனையடுத்து இராணுவம் சுற்றிவளைத்து இவர்களைச் சுட்டதாகவும் —

இச்சம்பவத்தில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் —

ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் —

உரும்பிராயில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மோதலில் புலிகள் தரப்பில் இரு பெண்கள் உயிரிழந்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது

(உ-15-100)

# புலிகளுடன் பேச்சு நடத்திய அதிகாரி குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை 9

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தொப்பிகல காட்டுப் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் முக்கிய முகாமொன்றில் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர் ஒருவருடன் பல சுற்று இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து பூரண விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என 'லங்காதீப' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

ஒரு வருடமாக இந்த அதிகாரி விடுதலைப் புலிகளுக்கு உதவிகள், ஒத்தாசைகள் வழங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# தமிழர் உரிமைக்கு குரல் கொடுத்த தங்கத்துரை

## ஜனாதிபதி அனுதாபச் செய்தி

தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர் அமரர் தங்கத்துரை.

— இவ்வாறு எம். பி. தங்கத்துரையின் குடும்பத்துக்கு தாம் ஒப்பமிட்டு அனுப்பிய அனுதாபச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் இச்செய்தியை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று நேரடியாகத் திருமலைக்கு எடுத்துச் சென்று, அமரர் தங்கத்துரையின் மகன் அகிலனிடம் கையளித்தார்.

அச்செய்தியின் சுருக்கம் வருமாறு:-

எம். பி. தங்கத்துரையின் படுகொலை குறித்து அதிர்ச்சி அடைந்துள்ளேன். இத்தகைய, அநாகரிகமான —படுகொலைச் சம்பவம் பாடசாலை வைபவம் ஒன்றில் நிகழ்ந்திருப்பது மக்களின் உயிரை கிஞ்சித்தும்மதிக்காத கொலைகாரர்களின் கொடூரப் போக்கையேகாட்டுகிறது

தமது தொகுதி மக்களுடன் நெருங்கிய தொடர்புவைத்திருந்தவர் தங்கத்துரை அந்த உறவே அவரது உயிர்பறிபோக வழி சமைத்து விட்டது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவர் தங்கத்துரை தமிழ் மக்களின் உரிமைக்காகக் உரத்துக் குரல் கொடுத்தவர். தமிழ் மக்களுக்கு அஹிம்சை வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண அவர் முயன்று வந்த வேளையில் படுகொலைசெய்யப்பட்டிருக்கின்றார்.

சமகால அரசியல் பிரச்சினைகளை உணர்ந்து பேச்சு மூலம் தீர்வுகாண உழைத்த அவரை, கொலை காரர்கள் நம்மிடம் இருந்து அகற்றிவிட்டனர்.

— இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-150)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பலரின் பதவி பறிபோகும்!

## தலைமைப் பதவி சிறிமாவிடமிருந்து சந்திரிகாவுக்கு?

கொழும்பு, ஜூலை 9

விரைவில் மேற்கொள்ளப் படவிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உட்கட்சி சீரமைப்பின்போது தற்போது கட்சியின் முக்கிய பதவி வகிப்பவர்கள் பலரின் பதவிகள் பறிபோகும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அக்கட்சியின் தலைவியாக விளங்கும் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு போஷகர் பதவியும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கட்சித் தலைவிப் பதவியும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 14, 15 ஆம் திகதிகளில் நீர்கொழும்பில் நடைபெறவுள்ள கட்சிக் கூட்டத்தில் தீர்வுத்திட்டம் மற்றும் அரசமைப்புத் திருத்தம் ஆகியவை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களிடமிருந்து. அபிப்பிராயங்கள் கோரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

# குடாரப்பு கரையை நோக்கி ஷெல் தாக்கு!

தென்மராட்சி, ஜூலை 9

கடந்த ஞாயிறு நள்ளிரவு முதல் திங்கட்கிழமை அதிகாலை வரை வடமராட்சி கிழக்கு கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகிலிருந்து வடமராட்சி கிழக்கு குடாரப்புப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலினால் குடாரப்புக் கடற்கரையில் நின்ற மீன்பிடிப் படகுகள் தீப்பிடித்து எரிந்தன. படகுகளிலிருந்த மீன்பிடி உபகரணங்களும் எரிந்து சாம்பராகின.

படகுகள் எரிந்த இடங்களில் புகைமண்டலம் காணப்பட்டதாகவும்—

காலை வரை ஷெல் வீச்சு நடத்தப்பட்டதால் நாகர் கோவில், மாமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை எனவும்—

இப்பகுதியிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

(உ-117)

**நாளை**

**ஆனி 26**

**வியாழக்கிழமை**

திதி: பஞ்சமி

முற்பகல் 8.09 வரை.

நட்சத்திரம்: பூரம்

பிற்பகல் 1.47 வரை.

நடேசரபிஷேகம்

குமாரஷஷ்டி விரதம்

சுபநேரம்: 7 28 8 58

ராகுகாலம்: 1 28 2 58

([illegible])

# 25 வருட நிறைவு வைபவம்

குருநகர், ஜூலை 9

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி நிறுவப்பட்டு 25 வருட நிறைவு வைபவம் எதிர்வரும் 12 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி அன்றைய தினம் காலையில் நிறைவுத் திருப்பலியும், மாலையில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் கலையரங்கில் இசை நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற உள்ளதாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் செயலர் மு. நெல்சன் தெரிவித்தார்.

(இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணியில் 5 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 9

வவுனியா நெடுங்கேணி மருதோண்டி என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு விசேட இராணுவ அதிரடிப் படையினர் புலிகளின் நிலைகள் மீது மூன்று அணிகளாகப் பிரிந்து சென்று தாக்குதல் நடத்தினர்: அவ்வாறு தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்பிய படையணி மீது புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் 2 படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; 19 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச் செல்லப் பட்டனர். அவர்களில் மூவர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர்.

இதற்கிடையில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினர். நெடுங்கேணிக்குத் தெற்கே நேற்று முன்தினம் மாலை புலிகளின் குழு ஒன்றைத் தாக்கினர் என்றும்—

இதில் 12 புலிகள் கொல்லப்பட்டனர் என்றும்—

இச்சண்டையில் 2 படையினரும் உயிரிழந்தனர் என்றும்—

யாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

(உ-3-21)

## கொலையாளி...

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்றும் —

துறைமுக அதிகார சபையில் காவலராகப் பணியாற்றும் ஒருவர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் —

அவர் மேற்படி விவரங்களை ஒப்புக்கொண்டு தகவல் வெளியிட்டார் என்றும் —

திருகோணமலை நகரில் பரவலாகப் பேச்சு அடிபட்டது என எமது திருகோணமலைச் செய்தியாளர் நேற்று இரவு தெரிவித்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ரி. என். டி. சில்வாயிடம் தாம் இது குறித்து நேரடியாக விசாரித்ததாகவும் —

நேற்றைய நிலையில்முடிவு அல்லது தகவல்கள் எதையும் வெளியிட முடியாது என அவர் பதிலளித்ததாகவும் —

எமது திருகோணமலைச் செய்தியாளர் கூறினார்.

"மூன்று பொலீஸ் குழுக்கள் தனித்தனியாக வெவ்வேறு கோணங்களில் இத் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை செய்கின்றன. இதுவரை 42 பேரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல்வேறு ஊகங்கள் கூறப்படுகின்றன. ஆனால் பொலீஸ் குழுக்கள் திறந்த மனதுடன் செயற்படுகின்றன இப்போதுள்ள நிலையில் எதுவும் கூறமுடியாது. நாளை (இன்று புதன்கிழமை) தகவல்களை வெளியிடக் கூடியதாக இருக்கும் என நான் நம்புகின்றேன்," —இவ்வாறு எஸ். எஸ். பி. மேலும் கூறியதாக திருமலைச் செய்தியாளர் குறிப்பிட்டார்,

(உ-150)

## ஏழு...

(முதலாம் பக்கத் தொடர்)

மௌலானா—

போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி— மற்றும் பிரதி அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா நாடாளுமன்ற உறுப்பினர்கள் உபாலி குலரத்ன, மஹிபால ஹேரத் ஆகியோரே நேற்று கொழும்பிலிருந்து திருமலைக்குச் சென்று பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அமைச்சர்கள் தாமும் தங்கத்துரையும் நெருங்கிப் பழகிய சம்பவங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய நினைவுகளை குறித்து தங்கத்துரையின் மகன் அகிலனுடனும், தங்கத்துரையின் சகோதரர் டாக்டர் பாக்கியத்துரையுடனும் பகிர்ந்து கொண்டனர்.

குண்டு வெடிப்பில் தங்கத்துரையுடன் உயிரிழந்த ஏனைய நான்கு பேரினதும் வீடுகளுக்கும் அமைச்சர் குழு சென்று ஆறுதல் கூறியது.

(உ-10-150)

## மறு அறிவித்தல் வரை கப்பல் இல்லை

திருகோணமலை, ஜூலை 9

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கான கப்பல் சேவை மறு அறிவித்தல் வரை இடம்பெற மாட்டாது என்று திருகோணமலை பட்டணமும், சூழலும் பகுதிக்கான பிரதேச செயலர் வேலும்மயிலும் தெரிவித்தார்.

கடற்படையின் அனுமதி கிடைத்த பின்னரே கப்பல் பயணம் தொடர்பாக ஆலோசிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

இதே வேளை—காங்கேசன் துறை செல்ல 350 அகதிகள் திருமலையில் காத்துக்கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## ஏறாவூரில் 2 புலிகள் பலி

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பம்மியடி என்ற இடத்தில் ரோந்து சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பொலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் உயிரிழந்ததாகவும் —

அவர்களின் சடலங்களை புலிகள் எடுத்துச் சென்று இலுப்பையடிச்சேனையில் நேற்றே அடக்கம் செய்தனர் என்றும் —

செய்தி வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

(உ-21)

## அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்)

மத்தியஸ்தம் ஆகியவை குறித்து இச்சிற்றுரையில் வலியுறுத்தப்படும்.

பின்னர் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது கூட்டணி எம். பிக்கள் சபைக்கு வந்து நீடிப்பை எதிர்த்து வாக்களிப்பர்.

அவசர காலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் தமது பழைய போக்கைக் கடைப்பிடிக்கவே ஈ. பி. டி. பியும், புளொட்டும் தீர்மானித்திருப்பதாக அறிய வருகின்றது.

ஈ.பி.டி.பி. வழமைபோல் விவாதத்தில் கலந்துகொண்டு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும். புளொட்டும் வழமைபோல் விவாதத்தில் கலந்து கொண்ட பின்னர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நிற்கும்.

முஸ்லிம் காங்கிரஸும் அவசரகாலச் சட்ட நீடிப்பை ஆதரிக்கும்.

இதேபோன்று சிறிமாணி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் அவசர காலச் சட்ட நீடிப்பு வாக்கெடுப்பின் போது அரசை ஆதரிக்கும் போக்கை கடைப் பிடிக்க முடிவு செய்திருக்கின்றது.

(உ-21-150)

# அரசுத் தரப்பின் பாதுகாப்பு மூலோபாயங்கள் தோல்வி!

## இராணுவ விமர்சகர் கருத்து

அரசின் பாதுகாப்பு மூலோபாயங்கள் செயலற்றுப் போகும் நிலை தோன்றியுள்ளது.

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

வடகொரிய சரக்குக் கப்பல் கடத்தப்பட்டது குறித்து பி.பி.ஸி யில் அதன் சிங்கள சேவைக்கு அவர் பேட்டியளித்தார்.

அப்பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

'தற்போது நடைபெற்றது அண்மைக் காலத்தில் மூன்றாவது சம்பவமாகும். கடந்த வாரம் மன்னாரில் 'மிஷன்' கப்பல் தீயிடப்பட்டது. சுமார் 5 வாரங்களுக்கு முன்னர் திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே தரித்து நின்ற கப்பலுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகளால் சர்வதேச கடற் போக்குவரத்திற்கு அழுத்தங்கள் ஏற்படுகின்றன. இப் பகுதிகளுக்கு கப்பல்கள் பொருளகளைக் கொண்டு செல்லும்போது காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கும். இதனால் கப்பல் கட்டணங்கள் உயரும்.

இவ்வாறான நடவடிக்கைகள் வடபகுதிக்கான கப்பல் போக்குவரத்தை குறைப்பதற்காக விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் போல் தெரிகின்றன.

தற்போது பொருள்களையும் வேறு பிரதேசங்களிலிருந்து பொதுமக்களையும் வடபகுதிக்குக் கப்பல்களே எடுத்துச் செல்கின்றன. எனவே இனிமேல் கப்பல் சேவையை கடற்படையின் உதவியுடனேயே மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

கேள்வி:- இந்தக் கப்பல்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கக் கூடிய ஆற்றல் தற்போது கடற்படைக்கு உள்ளதா?

பதில்:- கடற் படையினர் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுள்ளனர். அவர்கள் கடலில் பணியாற்றுவதற்கு மேலதிகமாக தரையிலும் குறிப்பாக 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் சில பகுதிகளின் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

கேள்வி:- எனவே கப்பல் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது கடற்படையினருக்கு கஷ்டமானதாக இருக்குமா?

பதில்:- ஆம் கடற்படையினர் வசம் தற்போது உள்ள கடற்கலங்கள் மற்றும் கடற் படையினரின் எண்ணிக்கையின்படி அவ்வாறான கடமைகளைப் —பொறுப்புக்களை — ஏற்பது இலகுவான பணியாக இராது. அதாவது கொழும்பிலிருந்து வடக்கே செல்லும் அனைத்துக் கப்பல்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் நிலையில் கடற்படையினர் இல்லை

கேள்வி:- இவ்வாறான சூழ்நிலையில் வட பகுதிக்கு பொருள்களையும் மக்களையும் ஏற்றிச் செல்ல அரசால் எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன?

பதில்:- 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் நெடுஞ்சாலையைக் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை கைப்பற்றி பொருள்களையும் மக்களையும் கொண்டு செல்லும் தரைவழிப் பாதையை ஏற்படுத்துவதே பிரதான நோக்கமாக இருந்தது. இந்த முயற்சி வெற்றி பெற எதிர் பார்த்ததை விடக் காலம் எடுக்கும் போல் தெரிகிறது. இந்த நடவடிக்கை அண்மையில் முற்றுப் பெறும் எனவும் கூற முடியாதுள்ளது. மிகவும் மந்த கதியிலேயே அது மேற்கொள்ளப்படுகிறது.

பல விமானங்களை இழந்துள்ள நிலையில் வடபகுதிக்கான போக்குவரத்தைக் கையாளும் நிலையில் விமானப்படையினர் இல்லை.

கேள்வி:- பல விமானங்கள் அழிக்கப்பட்டதால் விமானப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. கப்பல் போக்கு வரத்தும் பாதிக்கப் பட்டுள்ளது. அதே வேளை தரைவழிப் போக்கு வரத்தை அமைக்கும் முயற்சியும் வெற்றியளிக்கும் போல் தோன்றவில்லை. எனவே அரசின் அனைத்து மூலோபாயங்களும் செயற்படாத நிலை தோன்றியுள்ளது எனக் கூற முடியுமா?

பதில்:- ஆம். அவ்வாறான நிலைதான் தற்போது உருவாகியுள்ளது.

(உ-10)

## வடகொரிய..

(முதலாம் பக்கத் தொடர்)

அடுத்து நேற்று முன்தினம் மாலையில் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி அது புறப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் பருத்தித் துறைக்கு அப்பால் சில கிலோமீற்றர் தூரத்தை கப்பல் கடந்த நிலையில் கடற்புலிகளால் அது கடத்தப்பட்டது.

கனரக ஆயுதங்கள்பொருத்தப்பட்ட — குறைந்தது நான்கு படகுகளில் வந்த — கடற்புலிகள் கப்பலைக் கடத்தியதாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவுக்கு அப்பால் கடற்புலிகளின் அலம்பில் தளத்துக்கு அருகே இக்கப்பல் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

(உ-3-4-10-21-164)

## புலிகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெற்று சேவையில் ஈடுபட்ட இக் கப்பலை விமானத் தாக்குதல் மூலம் அழிக்கலாம் என்றாலும் —

அப்படி அழித்தால் கப்பலுக்குரிய காப்புறுதி நஷ்டஈட்டை அரசே செலுத்த வேண்டி ஏற்படலாம் என்று அரசுத்தரப்புக் கருதுவதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இதனால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இக் கப்பலை விமானம் மூலம் தாக்கி அழிக்கும் திட்டம் கைவிடப்பட்டிருக்கின்றது.

கப்பலில் உள்ள எரிபொருள், அதி நவீன ஜெனரேற்றர்கள் ஆகியவற்றைக் கைப்பற்றும் எண்ணத்துடனும் இக் கப்பலை புலிகள் சடத்தி இருக்கக்கூடும் என செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

(உ-3-5-10-21-164)

## முஸ்லிம்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் திரும்புவர்?

கொழும்பு, ஜூலை 9

எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் வருவதற்கான டிக்கெட்டுகளை வழங்குவதற்கு கொழும்பில் அதிகாரிகள் மறுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரின் அந்த வாரம் முழுவதும் விமான சேவைகள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படவிருக்கின்றன என்று கொழும்பில் தெரிவிக்கப்படுகின்றதாம்!

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம்கள் இக்கால எல்லையில் விமானம் மூலம் யாழ். கூட்டி வரப்படக்கூடும் என்றும் —

அதற்கு வசதியாகவே விமான சேவைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வைக்கப்பட்டிருப்பதாகவும் —

கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

(உ)

## பொலன்னறுவை தாக்குதலில் 2 படையினர் பலி

மட்டக்களப்பு — பொலன்னறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசத்தில் உள்ள — மகாவலி 'ஸி' வலயத்துக்கு உட்பட்ட — அருணபுரப் பகுதியில் விவசாயிகளுக்குக் காவலாக இருந்த படையினர் மீது நேற்றுக் காலை புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டது.

(உ-10-3-164)

## கப்டன் மீது இன்று விசாரணை

கொழும்பு, ஜூலை 9

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய மூன்று சிப்பாய்களுக்கு இராணுவ நீதிமன்றம் தலா 3 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துள்ளது. இவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய கப்டன் ஒருவர் மீதான விசாரணைகளை இராணுவ நீதிமன்றம் இன்று மேற்கொள்ளுகிறது.

## 2 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 9

மன்னார் பகுதியில் நேற்று அதிகாலை ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவத்தினர் உயிரிழந்தனர்; ஐந்து இராணுவத்தினர் படுகாயமுற்றனர்.

படுகாயமுற்ற இராணுவத்தினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(உ-21)

## ஆசிரியர் பதவி வெற்றிடம்

கொழும்பு, ஜூலை 9

அரசாங்கப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பதவி 35 சதவீதம் வெற்றிடமாக உள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் ஆண்டு ஒன்றில் இருந்து ஆங்கில மொழியைப் போதிப்பது என எடுத்துள்ள தீர்மானத்தை நடைமுறைப் படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பின்தங்கிய கிராமப் பகுதிகளிலேயே ஆங்கில ஆசிரியர்கள் பதவி அதிகமாக வெற்றிடமாக உள்ளன எனவும்—

எனவே கல்விப் பீடங்களில் கற்கை நெறிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் ஆங்கில ஆசிரியர்களைப் பின்தங்கிய பிரதேசங்களுக்கு அனுப்புவது என கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்09-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org